# பிறமலைக் கள்ளர்க்குப் பாத்தியப்பட்ட கருமாத்தூர் ஒச்சாண்டம்மன் கோவில் திருவிழாவில் குறவர் சமுதாயத்தினர்க்கு அளிக்கப்படும் முதல் மரியாதை: ஒரு சமூக மானிடவியல் பார்வை

**முனைவர் சி. மகேசுவரன்***

*கட்டுரைச்சுருக்கம்: மருது இருவர் மறைவிற்குப் பின் ஆங்கிலேய அரசால் நாடு கடத்தப்பட்ட 73 பேர்களுள் ஒருவர் 'சட மாயன் குறவர்' என்கிற ஒரு சிறு குறிப்பின் வழியே மேற் கொள்ளப்பட்ட ஆய்வால், மதுரை மாவட்டக் கருமாத்தூர் பகுதியை சார்ந்த பிரமலைக் கள்ளர் சமுதாயத்தினர்க்கும் குறவர் சமுதாயத்தினர்க்கும் இடையில் காலம் காலமாக நிலவி வரும் சமுதாயப் பண்பாட்டுத் தொடர்புறவை வெளிப்படுத்தும் வகையில் மலர்ந்த ஆய்வே இக்கட்டுரை. சட மாயன் குறவர் நினைவைப் போற்றும் வகையில் கருமாத்தூர் பகுதி வாழ் பிரமலைக் கள்ளர் சமுதாயத்தினர் சட மாயன் குறவரைத் தம் உறவாகவே கருதுவதுடன் அவர் வாரிசுகளுக்கு இன்றளவு தங்கள் குலதெய்வக் கோவிலான 'ஒச்சாண்டம்மன் கோ திருவிழாவின்போது குறவர் சமுதாயத்தினர்க்கு 'முதல் மரியாதை ' அளித்திடும் பண்பாட்டு நடத்தை குறித்து சமூக மானிடவியல் பார்வையில் இக்கட்டுரை பதிவு செய்கிறது.*

## 1.0 முன்னுரை

*மதுரை மாவட்டம் கருமாத்தூரில் அமைந்துள்ள பிறமலைக் கள்ளர்க்குப் பாத்தியப்பட்ட ஒச்சாண்டம்மன் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் கோவில் திருவிழாவின்போது பள்ளயப் ('படையல்'') பொருள்களைப் பங்கிட்டுக்கொள்ள மூங்கில் நாரினால் பின்னப்பட்ட கூடைகளை உருவாக்கி அளிப்பதுடன், பிறமலைக் கள்ளர்ப் பெண்மணிகளுக்குக் காது வளர்த்தெடுக்கும் பணியில் உதவுவதனாலும் குறவர் சமுதாயத்தினர்க்குப் பரிவட்டம் கட்டிப், பள்ளயப் பொருள்களின் பங்கு அளித்து முதல் மரியாதை செய்யப்படுவதாகக் கருதப்பட்ட சமயம்சார் சடங்கு ஆற்றுகையில்*

* *முதுநிலை ஆய்வுத் தகைஞர், இந்தியச் சமூக அறிவியல்கள் ஆய்வுக் குழு) மொழியியல் துறை பாரதியார் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர்-641 046*
maheswaran.heritage@gmail.com

*(*Religious Observance*) அடங்கியுள்ள உண்மையான சமூக வரலாற்று செய்திகளை சமூக மானிடவியல் பார்வையில் அளிப்பதே இக்கட்டுரைக் களமாக அமைகிறது.*

**2.0 குறவர், பிறமலைக் கள்ளர் தொடர்புறவு குறித்து நிலவும் இரு வரலாற்று நிகழ்வுகள் - ஒரு பார்வை**

*மதுரை மாவட்டம் கருமாத்தூரை சுற்றியுள்ள பகுதிகளில் குறவர், பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினர்க்கு இடையே இனங்காணலாகும் தொடர்புறவு குறித்து இரு வேறு வரலாற்று நிகழ்வுகள் நடந்துள்ளதாக நேரிடைக் களப்பணி ஆய்வுகளின்போது திரட்டப்பட்ட தகவல்கள்வழியே தெரியவருகிறது. அவை வருமாறு :*

**2.1. நிகழ்வு**

*இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி நிலவியபோது, அவர்களுடைய ஆட்சியதிகாரத்தை ஏற்றுக்கொண்ட ஜமீன்தாரர்களுக்கு உள்ளூர் வரி வசூல், திண்டல் பெறும் உரிமைகளை அளித்திருந்தனர். அவ்வகையில், மதுரை நாகமலைப் புதுக்கோட்டை ஜமீன்தாராக விளங்கிய சின்னக்கண்ணு சேர்வை அச்சுற்றுவட்டாரப் பகுதிகளில் வாழும் பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினரிடம் வரி வசூல் செய்வதில் மிகவும் கறாராக நடந்து வந்துள்ளார் - அதாவது, வரி கட்டத் தம்மிடம் உரிய பணம் இல்லை என்று கூறுவோரை, ஜமீனிலேயே சில நாள்கள் தங்கியிருந்து தமது ஜமீன் மாளிகை மற்றும் வயல்களில் வேலை செய்திடுமாறு பணித்து அவர்களுடைய உடல் உழைப்பைச் சுரண்டியுள்ளார். இதனால் மனம் வெதும்பிய பிறமலைக் கள்ளர் சமுதாயத் தலைவர்கள் தங்களுக்குள்ளேயே இரகசியமாகக் கூடிப் பேசி, ஜமீன்தாரர் சின்னக்கண்ணு சேர்வையைக் கொன்று அழிப்போர்க்கு நிலமும் ரொக்கமும் கொடுப்பதாக வாக்குறுதி அளிக்கின்றனர் அக்கொலை முயற்சியின்போது 'பிழைத்து வந்தால் கோவிலில் முதல் மரியாதை அளிப்பது செத்துவிட்டால் சாமியாகக் கும்பிடுவது" என்று உறுதியும் கொடுக்கின்றனர்.*

*கருமாத்தூரை அடுத்த கரிசல்பட்டியைச் சார்ந்த ஆண்டியப்பத் தேவர் என்பவர் இதற்கு உடன்பட்டு, நாகமலைப் புதுக்கோட்டை*

ஜமீன்தாரர் சின்னக்கண்ணு சேர்வையின் படைப் பிரிவிலேயே பணியாற்றி வந்த குறவரினப் படைவீரர் ஒருவருடைய உதவி, ஒத்துழைப்பை நாட, அதற்கு உடன்பட்ட அக்குறவரினப் படை வீரரும் முதலில் தமது குடும்பத்தினரை நாகமலைப் புதுக்கோட்டைப் பகுதியிலிருந்து கருமாத்தூரை அடுத்த கரிசல்பட்டியில் பாதுகாப்பாகக் குடியமர்த்திவிட்டு, ஆண்டியப்ப தேவருடன் நாகமலைப் புதுக்கோட்டை ஜமீன் மாளிகைக்கு வந்து, ஏறி வந்த குதிரையை ஜமீன் மாளிகைக்குக் கீழே பாதுகாப்பாகக் குறவரினப் படை வீரர் நிறுத்தியவாறு காத்திருக்க, ஆண்டியப்ப தேவர் ஜமீன் மாளிகைச் சுவர்மீது உடும்பு கட்டி மேலேறி, அங்கு ஓர் அறையில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த ஜமீன் சின்னக்கண்ணு சேர்வையின் கழுத்தை



அறுத்ததுடன், தனது கொலை முயற்சிக்கான அடையாளமாக மேற்படி ஜமீன்தாருடைய நீண்டு வளர்ந்திருந்த தலைமுடியை வெட்டி எடுத்துக்கொண்டு தப்பிக்க முயற்சிக்கும்போது, உயிர் பிரியும் நிலையில் ஜமீன் சின்னக்கண்ணு சேர்வை உரக்கக் குரலெழுப்ப, அக்கூக்குரலைக் கேட்டு அங்கு வந்த ஜமீனின் தம்பி கொலையாளி ஆண்டியப்ப தேவரின் வயிற்றில் குத்தீட்டியால் குத்திக் குடலைச் சரித்துவிடுகிறான் குடல் வெளியே வந்த நிலையிலும் தப்பித்துக் கீழே குதித்த ஆண்டியப்ப தேவரை உடன் வந்து காத்திருந்த குறவரின

வீரன் அவரது வயிற்றைத் துண்டால் கட்டிப், பாதுகாப்பாகக் குதிரையில் ஏற்றிக்கொண்டு, கருமாத்தூர் ஊர் எல்லையிலேயே தமது உயிரை விட, அவர் உயிர் துறந்த அந்த இடத்திலேயே பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினர் அவர்க்குச் சமாதியும் கட்டி வழிபடு இடமாக்கிவிட்டனர். அத்துடன், ஜமீன் சின்னக்கண்ணு சேர்வையைத் துணிவுடன் கொலை செய்தபோது உடன் துணைநின்று உதவிய குறவரின வீரனுக்கு (ஆண்டியப்ப தேவர்க்குத் தர ஒப்புக்கொண்ட) கோவில் முதல் மரியாதைஞ்யை ஆண்டுதோறும் அளிப்பது எனவும் அங்கு வாழும் பிறமலைக் கள்ளர் முடிவு செய்கின்றனர். அம்முடிவின்படி, அருகில் உள்ள ஒச்சாண்டம்மன் கோவிலில்[1] ஆண்டுதோறும் திருவிழாக் காலத்தின்போது அக்குறவர் சமுதாய வீரர்க்கும் முதல் மரியாதையாக அவர் காலத்திற்குப் பின் அவருடைய வழிவந்தோர்க்கும் பரிவட்டம் கட்டிப் பள்ளயப் பொருள்களின் பாதீடு அளிக்கப்படுகிறது.[2] கருமாத்தூரை அடுத்த கரிசல்பட்டியில் குடியமர்ந்த குறவர் சமுதாயத்தினர் அங்கேயே தொடர்ந்து வாழ்ந்துவந்ததுடன், அங்கு வாழும் பிறமலைக் கள்ளர் பெண்மணிகளுக்குக் காது வளர்ப்பதற்கும் உதவி வந்தனர்.[3] மேலும், கோவில் திருவிழாவின்போது பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினர்

[1] ஒச்சாண்டம்மன் கோவில் எனப் பெரு வழக்காகக் குறிப்பிடப்படும் இக்கோவிலின் கருவறையில் இருக்கும் தெய்வம் ஆங்காள ஐயன். இவர் தமது இரு துணைவியரான கண்ணாயி, பூங்கனி ஆகியோருடன் இங்கு வீற்றிருக்கிறார். இக்கோவிலின் முகப்பில் ஒச்சாண்டம்மன் என்று பெயர் விளங்கிய ஸ்ரீ ஆங்காள ஐயன், ஸ்ரீ கண்ணாயி, பூங்கனி கோவில் என்றே பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

[2] தகவல் உதவி : திரு. பெரிய கருப்புத் தேவர், மக்கள் தொடர்பு அலுவலர் (பணி நிறைவு), மதுரை - காமராசர் பல்கலைக்கழகம். இவருடைய தொடர்பைப் பெற்றுக் கொடுத்தவர் இக்கோவில் கோடங்கி ஐயன் பிடுக்கி திரு. ரமேஷ் ஆவார்.

[3] பிறமலைக் கள்ளர் சமுதாயப் பெண்மணிகள் தங்களுடைய வெற்றிலைத் தாம்பூலம் தரித்த வாயிலிருந்து குறவர் சமுதாயப் பெண்களின் கையில் தாம்பூலத்தை உமிழ்ந்து, 'இன்று முதல் நீங்கள் எல்லோரும் எங்களுள் ஒருவராகிவிட்டீர்கள்'' என்று உறவுத் தொடர்பை உறுதிப்படுத்தினர் என்று முதன்மைத் தகவலாளி திரு. சங்கரமூர்த்தியின் தாயார் திருமதி. மீனா அவர்கள் நேரிடைக் களப்பணி ஆய்வின்போது இக்கட்டுரை ஆசிரியருடன் உடனிருந்த அவரது மனைவி திருமதி. சுசீலா ராணி - அவர்களிடம் கூறிடப் பதிவுசெய்துகொள்ளப்பட்டது. வாயில் தரித்த தாம்பூலத்தைப் பரிமாற்றம் செய்து கொள்ளல், என்பது பண்பாட்டு நிலையில் நெருக்க உறவைப் புலப்படுத்தும் பண்பாட்டுக் காரணி என மானிடவியலாளர் கருத்துரைப்பர் என்பது இங்கு நினைத்துப் பார்க்கத் தக்கது.

படைத்திட்ட பள்ளயப் பொருள்களை பங்காளிகள் தமக்குள் பங்கிட்டுக்கொள்ளவும் தேவைப்படும் புதிய மூங்கில் (நார்) கூடைகளை முடைந்து கொடுக்கும் பணியிலும் குறவர் சமுதாயத்தினர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர்.[4]

நாகமலைப் புதுக்கோட்டைப் பகுதிக்கு மீண்டும் வந்து குடியேறி அங்கு இன்று வரை வாழ்ந்து வரும் குறவர் சமுதாய வாரிசுதாரர்க்கு உரிய கோவில் முதல் மரியாதையானது தற்போதைய வாரிசுதாரர்[5] திரு. சங்கரமூர்த்தி வகையறாவினர்க்குக் கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பு வரை தொடர்ந்து அளித்துவரப்பட்டது[6]. மேற்படி முதன்மைத் தகவலாளி சங்கர மூர்த்தியிடம் மேற்கொண்ட நேர்காணலின்போது, அவரது பூர்வீகம் கிழக்கு நாடு (அதாவது, இராமநாதபுரம்) என்றும் அங்கிருந்து முதலில் காரியாபட்டி பகுதிக்கும் பின்னர், சில தலைமுறைகளுக்கு முன்பு நாகமலைப் புதுக்கோட்டைப் பகுதிக்கு அவருடைய முன்னோர் குடியேறினர் என்றும் அருகில் உள்ள கருமாத்தூர் மற்றும் சுற்றிலும் உள்ள பிறமலைக் கள்ளர்

.........................................................................................

[4] இவ்வாறு, கோவில் திருவிழாக் காலத்தின்போது புதிதாக முடையப்பட்ட மூங்கில் (நார்க்) கூடைகளுடன் குறவர் சமுதாயத்தினர் வருவதைப் பார்க்கும் பிறமலைக் கள்ளர் சமுதாயக் கோவில் கோடங்கி, ‘குறவர் வகையறாவினர் வந்துவிட்டனர் வழி விடுங்கப்பா” என்று குரல் எழுப்பி, புதிதாகப் பின்னனிய மூங்கில் (நார்க்) கூடைகளுடன் வரும் குறவரின மக்களை எதிர்கொண்டு வரவேற்று, உரிய குறவர் வாரிசுதாரர்க்குப் பரிவட்டம் கட்டிப் பள்ளயப் பொருள்களின் ஒரு பங்கை அளித்து முதல் மரியாதை செய்வர் - என நேரிடைக் களப்பணி நேர்காணலின்போது முதன்மைத் தகவலாளி திரு. சங்கரமூர்த்தி தெரிவித்தார்.

[5] இத்தகவலும் முதன்மைத் தகவலாளியான நாகமலைப் புதுக்கோட்டை திரு. சங்கரமூர்த்தி கூறியதே.

[6] தற்போதைய குறவர் வாரிசுதாரர் யார் என்று கண்டுபிடித்து உதவிடுமாறு மதுரையைச் சார்ந்த குறவர் சமுதாயச் செயல்பாட்டாளர் திரு. இராவணன் என்பவரை அணுகிட, அவர் தமது உறவினர் தியாகு என்பவரைத் துணைக்கு அழைத்துக்கொண்டு, நாகமலைப் புதுக்கோட்டைப் பகுதியில் வாழ்ந்துவரும் குறவர் சமுதாயத்தினரிடம் விசாரித்து, அவருடைய மைத்துனர் முறையாகிய திரு. சங்கரமூர்த்தியே கருமாத்தூர் ஒச்சாண்டம்மன் கோவிலில் திருவிழாக் காலத்தின்போது முதல் மரியாதை பெற்று வரும் உரிய வாரிசுதாரர் என்று உறுதிப்படுத்தியதன் அடிப்படையில், மேற்படித் திரு. சங்கரமூர்த்தியை முதன்மைத் தகவலாளியாகக் கொள்வதே உரிய பயன் விளைவிக்கும் என்று முடிவு செய்து, நேரிடைக் களப்பணி ஆய்வின்போது உரியவாறு நேர்காணலும் நிகழ்த்தி வேண்டிய தரவுகள் திரட்டப்பட்டன.

சமுதாயப் பெண்டிர்க்குக் காது வளர்க்க உதவியாக நான்கு சென்ட் நிலம் அளிக்கப்பட்டது என்றும் அதன் தொடர்ச்சியாக உரிய வாரிசுதாரராகிய தமக்கும் அண்மைக் காலம் வரை ஒச்சாண்டம்மன் கோவில் திருவிழாக் காலத்தின்போது உரிய முதல் மரியாதை அளிக்கப்பட்டுள்ளது என்றும் மேல் விபரங்களைத் தெரிவித்தார்.[7]

## 2.2. நிகழ்வு

ஆங்கிலேய ஆட்சியதிகாரத்தை ஏற்க மறுத்துப் போரிட்ட சிவகங்கைச் சீமை மருது சகோதரர்களை இந்தியாவை ஆண்ட ஆங்கிலேய அரசு சிறைப் பிடித்துத் தூக்கிலிட்ட பின்னர், வேலு நாச்சியார் மருமகன் உடையணத் தேவர் உள்ளிட்ட 73 பேர்களைப் பினாங்கிற்கு நாடு கடத்தி அங்கு சிறையில் அடைத்தது. இந்த 73 பேர்களைப் பற்றிய விவரங்களைத் தமது காலா பாணி (2020) என்கிற வரலாற்றுப் புதினத்தில் பதிவிட்ட திரு. மு. ராஜேந்திரன் இ.ஆ.ப., (பணி நிறைவு) அவ்வாறு நாடு கடத்தப்பட்டு சிறை வைக்கப்பட்டோருள் மறவர் 43 பேர் அகமுடையர் இருவர், நாயக்கர் 14 பேர், சாணார் ஒருவர், பிள்ளைமார் ஐவர், பார்ப்பனர் ஒருவர், கத்தோலிக்கர் ஒருவர் எனக் குறித்துள்ளார்.

.................................................................................................

[7] நாகமலைப் புதுக்கோட்டை ஜமீன் சின்னக்கண்ணு சேர்வையைக் கொல்ல திட்டமிட்டுச் செயல்பட்ட ஆண்டியப்ப தேவர்க்குத் துணையாக உடனிருந்து உதவியதுடன், அக்கொலை முயற்சியின்போது ஜமீன் தம்பியால் வயிற்றில் குத்தப்பட்டுக், குடல் சரிந்த நிலைக்கு ஆளான ஆண்டியப்ப தேவரைக் குதிரைமீது ஏற்றிக், கருமாத்தூர் ஊர் எல்லை வரை பாதுகாப்பாகக் கொண்டுவந்து குறவரின வீரன் சேர்த்தமைக்காகவே ஆண்டியப்ப தேவர்க்கு உரிய முதல் மரியாதையை அக்குறவரின வீரர்க்கும் அவர் காலத்திற்குப் பின் வந்த வாரிசுதாரர் வரிசையில் மாயாண்டி, சங்கன், சட மாயன் என்பவர்களுக்கும் அதையடுத்து, அவ்வரிசையில் திரு. சங்கரமூர்த்திக்கும் உரிய கோவில் முதல் மரியாதை அளிக்கப்படுகிறது என்கிற வரலாற்று உண்மையை மேற்படித் திரு. சங்கரமூர்த்தியிடம் நேர்காணல் நடத்தும்வரை அவரும் அறிந்திருக்கவில்லை பிறமலைக் கள்ளரினப் பெண்களுக்குக் காது வளர்க்க உதவுதல், புது மூங்கில் கூடைகள் முடைந்துகொண்டுவந்து தருதல் உள்ளிட்டவற்றிற்காகவே உரிய முதல் மரியாதையானது தமக்கு வழங்கப்படுகிறது என்றே திரு. சங்கரமூர்த்தி எண்ணிக்கொண்டிருந்தார் என்பது கருத்தில் கொள்ளத் தக்கது.

இத்தகைய பதிவிற்கு மாறாகப், பிறமலைக் கள்ளர்: வாழ்வும் வரலாறும் எனும் தமது நூலில் உசிலம்பட்டியை சார்ந்த வழக்குரைஞர் திரு. சுந்தர வந்தியத்தேவன் தாம் மேற்கொண்ட நேரிடைக் களப்பணி ஆய்வுகளின்வாயிலாகக், கருமாத்தூர் ஒச்சாண்டம்மன் கோவில் கோடங்கி திரு. ஆங்கத்தேவர் என்பவரிடம் இருந்து ஆங்கிலேய ஆட்சியாளர்களால் பினாங்கிற்கு நாடு கடத்தப்பட்ட 73 பேர்களுள் கருமாத்தூரை சார்ந்தோர் மூவர் என்றும் அவர்கள் ஆண்டியப்ப தேவர், கூனி மாயத் தேவர், மற்றும் சட மாயன் குறவர் என்றும் தெளிவாகப் பதிவிட்டுள்ளார்.[8] இவ்வாறு நாடு கடத்தலுக்கு உள்ளான இம்மூவருள் சட மாயன் குறவர் தவிர ஏனைய இருவரும் இடைக் காலத்திலேயே இறந்துவிட்டமையால், சட மாயன் குறவர் மட்டுமே தமது சிறைத் தண்டனைக் காலம் முடிந்து, பினாங்கிலிருந்து கருமாத்தூர் திரும்பியதாகவும் அதனால் அவர்க்கு மட்டுமே கருமாத்தூர் ஒச்சாண்டம்மன் கோவிலில் சிறப்பு மரியாதை அளிக்கப்பட்டதாகவும் திரு. சுந்தர வந்தியத்தேவன் மேற்குறிப்பிட்ட தமது வரலாற்கு நூலில் முறையாகப் பதிவிட்டுள்ளார்.[9]

## 3.0 தொன்மைக் கதையாக மாற்றம் அடைந்துள்ள மேலும் ஒரு வரலாற்று நிகழ்வு பற்றிய சிறு அறிமுகம்

கருமாத்தூர் பகுதியை சார்ந்த பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினர் கீழ் நாடு, மேல் நாடு என இரு வேறு நிலப்பரப்புகளில் இரு வேறுபட்ட பிரிவினராக வாழ்ந்து வந்ததாகவும் இவ்விரு

.............................................................................................

[8] மேற்படி நூலாசிரியர் திரு. சுந்தர வந்தியதேவன் - அவர்களைக் கடந்த 10.11.2024 அன்று உசிலம்பட்டிக்குச் சென்று அவரது வீட்டில் நேர்காணல் நிகழ்த்தியபோது, 'சட மாயன் என்கிற பெயர் பிறமலைக் கள்ளர் வைத்துக்கொள்ளும் பெயர் எனவும் பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினரான தாம் நினைத்திருந்தால், சட மாயன் என்பவர் குறவர் என அடையாளம் காட்டாமல் மிக எளிதாக அவரைப் பிறமலைக் கள்ளர் என்றே நூலில் பதிவிட்டிருக்கலாம் எனவும் ஆனால், தாம் வரலாற்றைப் பதிவு செய்யும்போது, உள்ளதை உள்ளவாறே பதிவிட வேண்டும் அதுவே சரியான ஆய்வு நெறி'' எனத் தமது நூலில் முறையாகப் பதிவிட்டதாகவும் குறிப்பிட்டமை இங்குக் குறிக்கத் தக்கது.

[9] காண்க: வந்தியத்தேவன், சுந்தர 2011 பிறமலைக் கள்ளர் : வாழ்வும் வரலாறும். சென்னை : சந்தியா பதிப்பகம்.

பிரிவினர்க்கும் இடையே கருத்து முரண் ஏற்பட்டு அதனால் மோதல் நிகழ்ந்தபோது, சங்கன், மாயாண்டி என்னும் இரு குறவர் சமுதாயத்தினர் அவ்விரு பிரிவினர்களுக்கு இடையேயான பிரச்சினையில் தலையிட்டு, அப்பிறமலைக் கள்ளர் குழுக்களுக்கு இடையில் நிலவிய பகைமையைப் பேசி தீர்த்து வைத்ததாகவும் களப்பணி ஆய்வின்போது ஒரு வாய்மொழி வரலாற்று நிகழ்வு குறித்து நாகமலைப் புதுக்கோட்டை திரு. சங்கரமூர்த்தி கூறினர். இதிலிருந்து, பிறமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சார்ந்த இரு பிரிவினர்க்கு இடையே ஏற்பட்ட பகை முரணைத் தலையிட்டுப் பேசி, இணக்கமான சமுதாய உறவு மலர்ந்திட உதவிடும் அளவிற்குக் குறவர் சமுதாயத்தினர் கருமாத்தூர் பகுதியில் சமூகப் படிநிலையில் (Social Hierarchy) உயர்நிலையினராகத் திகழ்ந்து இருந்தனர் என்பது தெரியவருகிறது.[10]

மதுரை-காமராசர் பல்கலைக்கழகத்தில் மக்கள் தொடர்பு அலுவலராகப் (Public Relation Officer) பணி புரிந்து பணி



[10] நாஞ்சில் குறவர் கோன் எனும் பெயரில் அன்றைய நாஞ்சில் நாடான இன்றைய கன்னியாகுமரி மாவட்டப் பகுதிகளை ஆண்ட குறுநில மன்னராக குறவர் சமுதாயத்தினர் பேரும் புகழும் மிக்கோராக விளங்கிய வரலாற்றுச் செய்தியை இங்கே ஒப்பு நோக்கலாம்.

நிறைவு அடைந்துள்ள திரு. பெரிய கருப்புத் தேவர் அவர்களிடம் நிகழ்த்தப்பட்ட நேர்காணலின்போது அவர் தெரிவித்த கீழ்க் குறித்துள்ள ஒரு தொன்மைக் கதை (Mythological Tale) மேலே குறித்த வரலாற்று நிகழ்வுடன் ஒப்ப அமைந்துள்ளது:

'ஒரு முறை விருமன் என்கிற தெய்வத்திற்கும் பேக்காமன் என்கிற தெய்வத்திற்க்கும் இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் இருவரும் தமக்குள் போர் புரிய, அதைத் தடுத்து நிறுத்தியதுடன் அவ்விருவர்க்கும் இடையே மத்யஸ்தம் ('சமரசம்'') செய்த வைத்தது ஒரு முனி இதனாலேயே, அது மத்தியஸ்த முனி என்று இன்றும் அறியப்படலாகிறது.[11]

கீழ்நாட்டுப் பிறமலைக் கள்ளர், மேல்நாட்டுப் பிறமலைக் கள்ளர் என இரு வேறு பிரிவினராக விளங்கிய கள்ளர் சமுதாயத்தினர் இடையே தோன்றிய கருத்து வேறுபாடு, பகை முரண், மோதல், (குறவர் தலையீட்டால்) சமரசம் ஏற்படுதல் என்பனவற்றையே மேற்படி தொன்மக் கதையானது சுட்டுவதை நாம் உய்த்து உணரலாம். இதிலிருந்து, மேலே சொல்லப்பட்ட வரலாற்று நிகழ்வே பின்னர் தொன்மக் கதையாக மாற்றம் அடைந்துள்ளமை புலப்படும்.

## 4.0 நேரிடைக் களப்பணி ஆய்வுகளின் வழியே பெறப்பட்டுள்ள ஆய்வு முடிவுகள்

கடந்த 10.11.2024 அன்று கருமாத்தூர், உசிலம்பட்டி மற்றும் நாகமலைப் புதுக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் (இக்கட்டுரை ஆசிரியர்) மேற்கொண்ட நேரிடைக் களப்பணி ஆய்வுகள் வாயிலாக கீழ்க் குறித்துள்ள ஆய்வு முடிவுகள் பெறப்பட்டுள்ளன:

.........................................................................................

[11] இன்றும் மத்திச முனி கோவில் என்கிற பெயரில் கருமாத்தூர் நெடுஞ்சாலையில் ஒரு கோவில் உள்ளது.

*4.1.* கீழ் நாடு என்று அறியப்படும் இராமநாதபுரம் பகுதியிலிருந்து, முதலில் காரியாப்பட்டியை அடுத்த பாஞ்சார் என்கிற ஊருக்கும் பிறகு, கருமாத்தூரை ஒட்டிய கரிசல்பட்டிக்கும் பிழைப்பிற்காகக் குடியமர்ந்த குறவர் சமுதாயத்தினர் அங்கேயே தங்கி, நாளடைவில் அங்கே பூர்வீகமாக வாழ்ந்து வரும் பிறமலைக் கள்ளர் சமுதாயப் பெண்களுக்குக் காது வளர்ப்பதையும்[12] ஆண்டுதோறும் கருமாத்தூர் ஒச்சாண்டம்மன் கோவில் திருவிழாவின்போது பள்ளயப் ('படையல்") பொருள்களைப் (Objects of Ritual Oblation) பங்காளிகளுக்கு இடையே பங்கிட்டுக் கொள்வதற்கென மூங்கில் நாரால் புதிதாகப் பின்னப்பட்ட பள்ளயக் கூடைகளை அளிப்பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

*4.2.* ஆண்டு தோறும் நடைபெறும் திருவிழாவின்போது தாங்கள் அளித்திடும் மூங்கிலாலான புதிய பள்ளயக் கூடைகளுக்காகவும் பிறமலைக் கள்ளரினப் பெண்மணிகளுக்குக் காது வளர்த்திட உதவுவதற்காகவுமே மேற்படித் திருவிழா நடைபெறும் நாளில் தங்களுக்குக் கோவில் முதல் மரியாதையாகப் பரிவட்டம் கட்டிப், பள்ளயப் பொருள்களின் ஒரு பங்கையும் மாயாண்டி, சங்கன், சட மாயன் குறவர் வழிவந்த தங்களுக்கு அளிப்பதாக நாகமலைப் புதுக்கோட்டையில் வாழ்ந்து வரும் திரு. சங்கரமூர்த்தி கருதி வந்துள்ளார்[13]. நாகமலைப் புதுக்கோட்டை ஜமீன் சின்னக்கண்ணு சேர்வையைக் கொன்றுவிட்டு, வயிற்றில் குத்தப்பட்டுக் குடல்

.....................................................................................

[12] பொதுவாகக், காது மடலின் கீழ்ப்புறத்தில் கத்தியால் கீறித் துளையிட்டுப், பின் அப்புண் ஆறிட மூலிகை மருந்திட்டு, அடுத்து அக்காது மடல் துளையில் கனமான குணுக்கு எனும் உலோக வளையங்களை ஒன்றன்பின் ஒன்றாக சேர்த்து, அதன்வாயிலாகக் காது மடலைக் கீழ் நோக்கித் தொங்குமாறு செய்வித்துக், காலப்போக்கில், தண்டட்டி, பாம்படம் என எடைமிகு காதணிகளை அணியத் தக்க வகையில் செய்வதையே காது வளர்த்தல் என்று குறிப்பிடுகின்றனர் தொடக்க காலத்தில் இது முக்குலத்தோர்க்கான இனக்குழு அடையாளமாகத் (Ethnic Indicator) திகழ்ந்து, நாளாவட்டத்தில் பெரும்பான்மைத் தென் மாவட்டப் பெண்டிரது வட்டார அடையாளமாக ஆகிவிட்டது.

[13] தற்போதைய குறவரின வாரிசுதாரர் திரு. சங்கரமூர்த்தியின் சிறிய தந்தையார் (தந்தையாரின் தம்பி) பெயரும் சட மாயன் என்கிற தகவலானது, ஒரு குல முதல்வனாக (Cult Hero) சட மாயன் கருதப்பட்டமையைக் காட்டும்.

சரிந்து தப்பிய ஆண்டியப்ப தேவர்க்கு உற்றுழியாக உதவிய குறவரினப் படை வீரனுக்கு அளித்துவந்த உரிய முதல் மரியாதையே அவரது வாரிசான தமக்குத் தற்போது வரை அளிக்கப்படுகிறது என்கிற சமூக வரலாற்று நிகழ்வு பற்றி அவர்க்குத் தெரியவில்லை.

*4.3.* பிழைப்பிற்காக நாகமலைப் புதுக்கோட்டைப் பகுதியிலிருந்து கருமாத்தூரை அடுத்த கரிசல்பட்டிக்கு வந்து குடியமர்ந்த குறவர் சமுதாயத்தினர் கீழ் நாடு, மேல் நாடு என இரு வேறு வாழ்விடப் பரப்புகளில் இரு பிரிவினராக வாழ்ந்து வந்த பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினர்க்கு இடையே மோதல் ஏற்பட்டபோது, அவ்விரு தரப்பினர்க்கும் சமரசம் செய்து வைக்கும் அளவிற்குப் பின்னாளில் குறவரின மக்கள் சமுதாய நிலையில் உயர்ந்துவிட்டனர்.

*4.4.* நாகமலைப் புதுக்கோட்டையின் ஜமீன்தாரர் சின்னகண்ணு சேர்வையைக் கொல்வதற்குத் திட்டமிட்ட ஆண்டியப்பத் தேவர்க்கு உறுதுணையாக உடன் இருந்து, கொலை முயற்சியின்போது வயிற்றில் குத்துபட்டுக், குடல் சரிந்த நிலையில் இருந்த ஆண்டியப்ப தேவரைக் குதிரை மேல் ஏற்றிப், பாதுகாப்பாகக் கருமாத்தூர் ஊர் எல்லை வரை கொண்டு வந்து சேர்த்திட்டமைக்கு அக் குறவரின் வீரனுக்கும் அவனது காலத்திற்குப் பின் அவன் சந்ததியினர்க்கும் கருமாத்தூர் ஒச்சாண்டம்மன் கோவில் திருவிழாவின்போது பரிவட்டம் கட்டி, பள்ளயப் பொருள்களின் ஒரு பங்கினையும் அளித்து முதல் மரியாதை நிகழ்த்தப்படுகிறது.

*4.5.* மருது சகோதரர்கள் மறைவிற்குப் பிறகு பினாங்கிற்கு நாடு கடத்தப்பட்டு சிறை வைக்கப்பட்ட 73 பேர்களுள் கருமாத்தூரை சார்ந்த மூவருள் குறவரின சட மாயன் நினைவைப் போற்றும் வகையில் கருமாத்தூர் பகுதி வாழ் பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினர் சட மாயன் குறவரைத் தமது உறவாகவே

கருதுவதுடன், தங்களையும் குறவர் சமுதாயத்தினர் என்றே நன்றிப் பெருக்குடன் பெருமை பொங்க இன்றும் குறிப்பிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.[14]

## 5. நிறைவுரை

மருது சகோதரர் மறைவிற்குப் பின் நாடு கடத்தப்பட்ட 73 பேர்களுள் ஒருவர் கருமாத்தூர் சட மாயன் குறவர் என்கிற ஒரு சிறு குறிப்பின்வழியே மேற்கொள்ளப்பட்ட ஆய்வினால், மதுரை மாவட்டம் கருமாத்தூர் பகுதியை சார்ந்த பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினர்க்கும் குறவர் சமுதாயத்தினர்க்கும் இடையில் காலம் காலமாக நிலவும் வரலாற்றுப், பண்பாட்டுத் தொடர்புறவு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய சமூக வரலாற்று ஆய்வுகள் மேன்மேலும் பெருக வேண்டும்.

[14] நாகமலைப் புதுக்கோட்டை ஜமீன் சின்னகண்ணு சேர்வையைக் கொல்லும் திட்டத்தில் உடனிருந்து உதவ ஒப்புக்கொண்டதுடன், அம்முயற்சியின்போது வயிற்றில் குத்துபட்டுக், குடல் சரிந்த நிலையிலிருந்த சமூகப் போராளியான ஆண்டியப்ப தேவரைப் பாதுகாப்பாகக் குதிரையில் ஏற்றிக், கருமாத்தூர் ஊர் எல்லை வரை உடன் பயனித்து உதவிய குறவரினப் படை வீரனைப் பெயர் எதுவும் குறிப்பிடாமல், குறவர் என்று மட்டுமே இவ்வாய்மொழிக் கதையில் குறிப்பிடப்பட்டாலும் அதே சம காலத்தில் பினாங்கு சிறையிலிருந்து விடுதலையடைந்து ஊர் திரும்பிய கருமாத்தூர் சட மாயன் குறவர் என்கிற பெயரையே மேற்படிக் குறவரினப் படை வீரனுக்கும் இட்டுச் சொல்லும் மரபானது பின்னாளில் ஏற்பட்டுவிட்டதாகக் கருதலாம் அதனாலேயே, பினாங்கு சிறையிலிருந்து விடுதலைக்குப் பின் ஊர் திரும்பிய சட மாயன் குறவரை ஒச்சாண்டம்மன் கோவிலின் உள்ளே அனுமதிக்கப் பிறமலைக் கள்ளர் தயங்கியபோது, படையலுக்கென உலையில் வைத்த பொங்கல் பானையானது பொங்காமல் நின்றுவிட்டதாகவும் சட மாயன் குறவரைக் கோவிலுக்கு உள்ளே வர அனுமதித்த பிறகே, பொங்கல் பானை பொங்கியதாகவும் ஒரு வாய்மொழிக் கதையும் பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினரிடம் வழக்கில் உள்ளது.

**நோக்கீட்டு ஏடுகள் (தமிழில்)**


| | | |
|---|---|---|
| மகேசுவரன், சி. | *2023* | 'கொங்கு நாட்டின் இன்றைய பழங்குடியினரது வாழ்வியற்பாங்குகள்''. பண்பாட்டு வாழ்வியல் (பண்பாட்டியல் பற்றிய முழுதளாவிய பார்வை). சென்னை : பாரதி புத்தகாலயம். |
| மகேசுவரன், சி. | *2024* | 'குமரி மாவட்ட வேளிமலைக் குமாரகோவில் திருக்கோவில் முருகன் – வள்ளி திருமண நிகழ்வின்போது நடத்தப்படும் குறவர் படுகளம் பெறும் சிறப்பிடம்'' (அனைத்துலக முருகன் ஆய்வு மாநாட்டில் படித்தளிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை). பழனி : இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை. |
| ராஜேந்திரன். மு. | *2020* | காலா பானி. அம்மையப்பட்டு, வந்தவாசி : அகழி பதிப்பகம். |
| வந்தியத்தேவன், சுந்தர | *2011* | பிறமலைக் கள்ளர் : வாழ்வும் வரலாறும். சென்னை : சந்தியா பதிப்பகம். |



**நன்றியுரை**

முகநூலில் பகிரப்பட்ட சட மாயன் குறவர் என்கிற ஒரு சிறு குறிப்பைத் தொடக்கப் புள்ளியாக வைத்து, நேரிடைக் களப்பணி ஆய்வுகள், தகவலாளிகளுடன் நேர்காணல்கள் உள்ளிட்ட தொடர் முயற்சிகள்வழியே குறவர், பிறமலைக் கள்ளர் என்னும் இரு வேறு சமுதாயத்தினர்க்கு இடையே நிலவிடும் தொடர்புறவை வெளிப்படுத்தி, வரலாற்றுப் பதிவின் ஒரு முழுதளாவிய வரைவாக அதனை மீட்டுருவாக்கம் செய்திட அனைத்து உதவிகளையும் புரிந்த திரு. மு. சுந்தரராஜன் (கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (பணி நிறைவு), காவல் துறை, தமிழ்நாடு அரசு) – அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இங்கே பதிவு செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.